[1978 மார்ச் 14

எப்பொழுதுமே அதிகாரிகள் அடிக்கடி காரணங்கள் சொல்லி கொண்டுதான் இருப்பார்கள். பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை இலாக்காவை நான் கொஞ்ச நாள்— ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபொழுது வைத்திருந்த நேரத்தில் எத்தனையோ விதிமுறைகள் சுட்டிக் காட்டப்பட்டன என்றாலும்கூட, '' தடைக் கற்கள் உண்டென்றாலும் தடந்தோள் உண்டென '' புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கூறியதைப்போல் விதிமுறைகளைத் தூக்கியெறிந்து விட்டு பின்தங்கியவர்களாகவும், மிகவும் பின்தங்கியவர்களாகவும் மாற்றுகின்ற முறைகள் எடுக்கப்பட்டன. எனவே, அரிசன நலத் துறை அமைச்சரவர்கள் அக்கறை காட்டி இதைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.30.)

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, அதிகாரிகளைப்பற்றிய அனுபவம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நிரம்ப இருக்கிறது. இந்த 6 மாதத்தில் எனக்கும் கொஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. எனினும் மனம் இருக்குமானால் மார்க்கம் பிறக்கும் என்பதை நான் அறிவேன்.

பாதிரிவேடு பகுதியில் தீண்டாமைக் குற்றங்கள்.

*561 வினா—திரு. வி. ரகுராமன் : மாண்புமிகு அரிசனநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டம் (மேற்கு) காஞ்சிபுரம் ' இ4 ' பாதிரிவேடு காவல்நிலைய எல்லையைச் சேர்ந்த தேர்வாய்—கொள்ளானூர் கிராமங்களில் தீண்டாமை கடைப் பிடிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) 1977, மே மாதத்தில் இக்குற்றங்கள் குறித்து எத்தனை புகார்கள் காவல்துறைக்கு கொடுக்கப்பட்டன ?

(இ) எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டன ?

(ஈ) வழக்குகள் எந்நிலையிலுள்ளன ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

(அ) செங்கை மாவட்டம் (மேற்கு), காஞ்சீபுரம் ' இ 4' பாதிரிவேடு காவல்நிலைய எல்லையைச் சேர்ந்த தேர்வாய்—கொள்ளானூர் கிராமங்களில் தீண்டாமை கடைப் பிடிக்கப்படுவது பற்றி அரசுக்கு குறிப்புரை இல்லை.

(ஆ) 1977 மே மாதத்தில் இக்குற்றங்கள் குறித்து இரண்டு புகார்கள் காவல்துறைக்கு கொடுக்கப்பட்டுள்ளன.

(இ) இரண்டு புகார்களில் ஒன்று பொய் என்று விசாரணையில் தெரிய வந்துள்ளது; ஒரு புகார் மீது மட்டும் குடியுரிமைச் சட்டத்தின் பிரிவு 7 (1)(டி)இன் படி குற்ற எண். 137/77-ல் மற்றும் 352 இ.பி.கோ.-வில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) இவ்வழக்கு சி. சி. 521/77-ல் திருவள்ளூர் குற்றவியல் முதல் வகுப்பு நீதிமன்றத்தில் பதிவாகி விசாரணையில் உள்ளது

தஞ்சை மாவட்டத்தில் அரிசனங்களுக்கு வீட்டுமனைகள்.

*562 விஞ—திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் குடியிருப்பு மனை இல்லாத அரிசனக் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) அவர்களுக்கு இலவசமாக வீட்டுமனை வழங்கும் திட்டம் அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

(அ) தஞ்சை மாவட்ட ஆட்சியரிடமிருந்து சரியான விவரங்கள் கேட்கப்பட்டுள்ளன.

(ஆ) அவர்களுக்கு இலவசமாக வீட்டுமனை வழங்கும் திட்டம் அரசிடம் உண்டு. 1949 வருடத்திலிருந்து நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு இலவசமாக வீட்டுமனை வழங்கும் திட்டம் செயல் பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 31—12—1977வரை, 23.724 வீட்டுமனை பட்டாக்கள் தஞ்சை மாவட்டத்தில் வழங்கப் பட்டுள்ளன.

திரு. அ. செல்லப்பா : பேரவைத் தலைவர் அவர்களே, 1977-78-லே எத்தனை பேர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப் பட்டுள்ளது. 1978—79-லே எத்தனை பேர்களுக்கு வழங்க இந்த அரசு உத்தேசித்துள்ளது ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இதுவரை தஞ்சை மாவட்டத்தில் மொத்தமாக 23,724 பேர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. 1977-78-லே எவ்வளவு பேர்களுக்கு வழங்கப்பட்டது என்கிற விவரம் இங்கே இல்லை. தனிக் கேள்வி போட்டால் சேகரித்துச் சொல்கிறேன்.